பக்கங்கள் 17 + 03

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 11 வெள்ளிக்கிழமை 28.11.2025 | அதிர்வு 121

## A/L பரீட்சைகள் குறித்து பிரதமர் தலைமையில் விசேட கலந்துரையாடல்

தடைப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைகளை மீள ஆரம்பிப்பது குறித்து

05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# பேரிடரில் 65 பேர் பலி 33 பேரைக் காணோம்!

## நாடு முழுவதிலும் பேரனர்த்தம் 50 ஆயிரம் பேர் வரை பாதிப்பு

நாடு முழுவதும் இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளம், புயல், காற்று, மண்சரிவு போன்ற பேரிடர்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 65 எட்டியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

கம்பஹாவில் மண் சரிவில் காணாமல் போன 12 பேரோடு சேர்த்து மொத்தம் 33 பேர் காணாமல் போயிருக்கின்றனர்.

நேற்று முற்பகல் கிடைத்த தகவல்களின் படி 12 ஆயிரத்து 313 குடும்பங்களை சேர்ந்த 43 ஆயிரத்து 991 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்தத் தொகை மேலும் பல்லா யிரத்தால் அதிகரிக்கலாம் எனக் கூறப் படுகின்றது.

06▶

# வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஏ–9 வீதி போக்குவரத்து முற்றாகத் தடை!

(கி.வசந்தன்)

வவுனியாவில் பெய்து வரும் மழையின் காரணமாக ஏ - 9 வீதி போக்குவரத்து முழுமையாகத் தடைப்பட்டுள்ளது

வவுனியாவில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற கடும் மழை காரணமாக ஏ - 9 வீதியின் நொச்சிமோட்டை பாலம் பகுதியில் வெள்ள நீரானது வீதியை மேவி 3 அடிக்கு மேல் வேகமாகப் பாய்வதனால் வாகனங்களும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வடக்குக்கும்

05▶






# பேரிடர் மீட்பு நடவடிக்கைகளில் இந்திய ஹெலிகள், விமானங்கள்

## ஐ.என்.எஸ். விக்ராந்த் விமானத் தாங்கிக் கப்பல் களத்தில்

(ந.லோகதயாளன்)

தற்போது கொழும்பில் உள்ள இந்திய விமானம் தாங்கி கப்பலான ஐ.என்.எஸ். விக்ராந்தில் உள்ள 8 ஹெலிகள் மற்றும் விமானங்களை இலங்கையில் பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்காக வழங்க இந்தியா முன்வந்திருப்பதாக இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக இது தொடர்பாக இந்தியாவிடம் உதவி கோரப்பட்டுள்ளது என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துயகொண்டா தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினரின் 75 ஆவது ஆண்டு கொண்டாட்ட நிகழ்வில் பங்குபற்றுவதற்காக இந்தியக் கடற்படையின் இந்திய விமானம் தாங்கி கப்பலான ஐ.என்.எஸ். விக்ராந்த் கொழும்பு வந்துள்ளது. இந்தச் சமயத்திலேயே இலங்கையைப் பேரிடர் தாக்கியுள்ளது.

தற்போதைய பேரிடர் நிலைமை குறித்த விசேட ஊடக சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துயகொண்டா கூறுகையில், “இந்த விடயத்தில் இந்தியாவின் பதில் சாதகமானதாக இருந்தது. இருப்பினும், பாதகமான காலநிலை காரணமாக, கொழும்பில் இந்தியக் கப்பலில் இருந்து ஹெலிகள், விமானங்கள் புறப்பட்டுச் செயற்படுவதில் விமானிகள் சிரமப்படுகின்றார்கள்.” – என்றார்.

பேரிடர் தொடர்பில் வெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைக்க அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுடனான சந்திப்பு இன்று மாலை நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





### வரலாறு காணாத அளவுக்கு

# களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரிப்பு! பொதுமக்களுக்குச் சிவப்பு எச்சரிக்கை!!

## மோசமான பாதிப்பைச் சந்திக்கவுள்ள கொழும்பு பிரதேசம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வரலாறு காணாத அளவுக்கு களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் களனி கங்கையை அண்டிய பிரதேசங்களில் வாழும் பொது மக்களுக்கு சிவப்பு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 24 மணி நேரத்துக்குள் களனி கங்கையை அண்டிய பிரதேசங்களில் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்படக் கூடும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் கொழும்பு பிரதேசத்துக்கும் அதிக பாதிப்பு ஏற்படக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, களனி கங்கையை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களை மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் விரைந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் நீர்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



# நாடாளுமன்ற அமர்வு திங்கள் வரை ஒத்திவைப்பு!

இலங்கையில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலைக்கு மத்தியில் இன்று காலை 9 மணிக்குக் கூடிய நாளுமன்றம் 24 நிமிடங்கள் மட்டுமே நடந்த நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

நாட்டில் தற்போதுள்ள ஏற்பட்டுள்ள அனர்த்த சூழ்நிலை காரணமாக இன்று நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத்திட்ட விவாதத்தை நடத்தாமல் இருப்பதற்கும், காலை 9 மணி முதல் காலை 9.30 மணி வரை மாத்திரம் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், நாளை சனிக்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் இருப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் 1 மற்றும் 2 ஆம் திகதிகளில், அதாவது திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய தினங்களில் நள்ளிரவு 12 மணி வரை வரவு – செலவுத் திட்ட விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது

இவ்வாறான நிலையில் இன்று காலை 9 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நாடாளுமன்றம் கூடியது. இதனையடுத்து 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 2025 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 2459/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் விவாதமின்றி அங்கீகரிக்கப்பட்டன.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரச தரப்பு பிரதம கொறடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட அமைச்சர்கள். எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தற்போதைய இடர் நிலைக்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்த நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிவரை நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.



# வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய தவிசாளராக சிவாஜி தெரிவு

(எஸ்.நிதர்ஷன்)

வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய பேரவை) சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவானார்.

தவிசாளராகச் செயற்பட்ட தவமலர் சுரேந்திரநாதன், தனது தவிசாளர் பதவியை இராஜிநாமா செய்த நிலையில் எம்.கே.சிவாஜிலிங்கம் 27 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளராகத் தெரிவானார்.

16 உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகர சபைக்குக் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய பேரவை) 7 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியது.

எம்.கே.சிவாஜிலிங்கத்தை முதன்மை வேட்பாளராக நிறுத்தி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வல்வெட்டித்துறை நகர சபையில் போட்டியிட்டிருந்த போதும், எம்.கே.சிவஜாலிங்கம் நியமனப் பட்டியல் ஊடாக களமிறங்கியிருந்ததால் உடனடியாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லை.

ஏற்கனவே, தெரிவான சபை உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இராஜிநாமா செய்த நிலையில் அந்த வெற்றிடத்துக்கு எம்.கே.சிவாஜிலிங்கம் கட்சியால் நியமிக்கப்பட்டார்.

எம்.கே.சிவாஜிலிங்கம் உறுப்பினராகத் தெரிவானதும் தற்காலிக காலத்துக்குச் செயற்பட்ட தவிசாளர் தவமலர் சுரேந்திரநாதன் தனது தவிசாளர் பதவியை இராஜிநாமா செய்தார்.

புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சா.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிலையில் தவிசாளர் பதவிக்காக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு 7 பேரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட மகாலிங்கம் மயூரனுக்கு 6 பேரும் ஆதரவு வழங்கினர். தேசிய மக்கள் சக்தியின் மூன்று பேரும் வாக்களிப்பில் நடுநிலை வகித்தனர்.















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வடக்குக்கும்...**

தெற்குக்கும் இடையிலான ஏ – 9 வீதி போக்குவரத்து முழுமையாகத் தடைப் பட்டுள்ளது

வவுனியாவில் இருந்து முல்லைத் தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் அந்தப் பகுதிகளி லிருந்து வவுனியா அல்லது தென் பகு திக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

இதன் காரணமாக பல நூற்றுக் கணக்கான வாகனங்கள் இரண்டு பக்கங்களும் நீண்ட வரிசையில் தரித்து நிற்பதைக் காணக் கூடியதாக இருக் கின்றது. பஸ்களில் வந்த பயணிகளும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள னர்.

இதேவேளை ஏ – 9 வீதி போக்குவரத் தைத் தடை செய்து தாண்டிக்குளம் மற் றும் பறநாட்டாங்கல் சந்தி ஆகிய பகுதி களில் பொலிஸார் வீதித் தடை போட்டு அதற்கு அப்பால் வாகனங்கள் செல்வ தற்கு அனுமதி வழங்கப்படவில்லை.







**A/L பரீட்சைகள்...**

இன்று மாலை பிரதமர் ஹரிணி அமர சூரிய தலைமையில் விசேட கலந்துரை யாடல் நடைபெறவுள்ளது என்று அமைச் சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், பரீட்சை களை மீள ஆரம்பிக்கும் திகதிகள் மற்றும் நடைமுறை நடவடிக்கைகள் குறித்தும், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகிகள் பாதிப்புகளை குறைக்கும் திட்டங்கள், பரீட்சை நடை பெறும் போது சுகாதார மற்றும் பாது காப்பு முன்னெச்சரிக்கைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளன என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட் டார்.

கலந்துரையாடலின் முடிவு குறித்து நாளை காலை இறுதித் தீர்மானம் அறி விக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின் றது.

# வடக்கு பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவிருந்த பரீட்சைகள் ஒத்திவைப்பு

**செய்திக் குறிப்பு**

**வடக்கு மாகாண சபையின் விவசாயப் போதனாசிரியர் தரம் III மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள்**

எதிர்வரும் 29.11.2025, 30.11.2025 ம் திகதிகளில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த, வடக்கு மாகாண சபையின் விவசாயப் போதனாசிரியர் தரம் III மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள், நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களைக் கவனத்தில் கொண்டு, மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு.
வடக்கு மாகாணம்
28.11.2025

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கைப் பேரிடர் காரணமாக, வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட விருந்த பரீட்சைகள் மறு அறிவித் தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆழ்வாப் பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் விவசாயப் போதனாசிரியர் தரம் ஐஐஐ மற்றும் பயிற் சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் நாளையும் (சனிக்கிழமை), நாளைமறுதினமும் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவிருந்தன.

எனினும், தற்போது நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் இடர் நிலையைக் கருத்திகொண்டு, இந்தப் பரீட்சைகள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள ன.

பரீட்சை நடைபெறும் புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.



## பேரிடரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் ரயில் சேவை முற்றாக முடங் கியுள்ளது. மின்சாரமும் பல இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர் புச் சேவைகள் வடக்கு உட்பட பல இடங் களில் பெருமளவில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் மற்றும் மண் சரிவுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பேரிடரிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்பதற்கான உதவிகளை வெளிநாடுகளிடமிருந்து பெறுவதற்காக வெளிநாட்டு தூதரகங்களின் பிரதிநிதி களுடன் இலங்கை அரசுப் பிரதிநிதிகள் இன்று மாலையில் சந்திப்புகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதே நேரம் நேற்று கொழும்பு – யாழ்ப் பாணம் இடையில் சேவையில் ஈடுபட்ட பயணிகள் பஸ் ஒன்று வெள்ளத்தில் சிக்கி நடுவில் அல்லாடிய நிலையில், அதிலிருந்து 39 பயணிகள் ஹெலிக் கொப்டர் ஒன்றில் மீட்கப்பட்டு கல ஓயா தேவாலயத்துக்கு அருகில் உள்ள இடத்தில் பாதுகாப்பாக இறக்கப்பட்டிருக் கின்றனர் என்று முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மழை, புயல்,வெள்ளம் தொடர்ந்து தீவிரமாகி வருகின்றது. அனர்த்த நிலமை குறையும் சூழ்நிலை இந்த செய்தி எழுதப்படும் வரை ஏற்படவில்லை. நிலைமை நாளையும் மோசமாகலாம் என்று எதிர்வு கூறப்படுகின்றது.



# நாவலப்பிட்டியில் இன்று மண்சரிவு! 3 மாதக் குழந்தை உட்பட மூவர் பலி!!

(க.கிஷாந்தன்)

கண்டி, நாவலப்பிட்டி பழைய ரயில் பாதைக்கு அருகில் அமைந்திருந்த ஒரு வீட்டின் மீது இன்று காலை ஏற்பட்ட மண்சரிவில், அந்த வீட்டில் வசித்த இரு பெண்களும் மற்றும் மூன்று மாதக் குழந்தையும் உயிரிழந்துள்ளனர்.

நாவலப்பிட்டி பகுதியில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழையால் அந்த வீட்டின் பின் பகுதியில் இருந்த மண்மேடு இடிந்து வீடு முழுவதையும் மூடிப் புதைந்துள்ளது என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கிராம மக்கள் மற்றும் நாவலப்பிட்டி பொலிஸ் அதிகாரிகள் இணைந்து வீட்டில் இருந்த மூவரையும் மீட்கப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும், மூவரையும் உயிருடன் காப்பாற்ற முடியவில்லை.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் நிலவி வரும் மோசமான காலநிலை காரணமாக இதுவரை ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 50 குடும்பங்கள் பாதுகாப்பான தங்குமிடங்களுக்கு இடம்பெயர்த்துள்ளனர் என்று பிரதேச செயலாளர் ரம்யா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.




# மன்னார் - மதவாச்சி பிரதான வீதி போக்குவரத்து வெள்ளத்தால் தடை

(மன்னார் நிருபர்)

மன்னார் தொடக்கம் மதவாச்சி வரையான வீதிகளில் வெள்ள நீர் காரணமாக அநேக இடங்களில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. எனவே, அந்தப் பாதை ஊடாக பயணம் செய்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தங்கள் பயணங்களை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் மல்வத்து ஓயாவின் நீர்மட்டம் (தேக்கம்) 16."9" அடியைத் தாண்டி உள்ளதாலும், நாச்சதுவ குளத்தின் பாதுகாப்பு கருதி மேலும் வான் கதவுகள் திறக்கப்பட இருப்பதனாலும் மல்வத்து ஓயா ஆற்றங்கரை ஓரத்தில் தாழ் நிலப் பகுதியில் இருப்போர் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உதவ முன்நிற்போம்!

முழு நாடுமே முன்னெப்போதும் இல்லாத விதத்தில் பேரிடரை - பேரனர்த்தத்தை எதிர்கொண்டு நிற்கின்றது.

தொடர்ந்து மோசமான வானிலை, மழை, வெள்ளத்தை சந்தித்துக் கொண்டிருந்த நாட்டை இப்போது அதன் கிழக்குப் பகுதியில் உருவாகிய 'டித்வா' புயல் ஒரு கை பார்த்திருக்கின்றது. புரட்டிப் போட்டிருக்கின்றது. தொடர்ந்து பேரழிவு நீடிக்கின்றது.

வழமையாக நாட்டின் ஏதேனும் ஒரு பகுதி அல்லது ஓரிரு பகுதிகள் ஒரே சமயத்தில் இத்தகைய புயல், வெள்ளம், சூறாவளி போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வதுண்டு. ஆனால் இந்தத் தடவை முழு நாடுமே ஒரே சமயத்தில் புயல், வெள்ளம், காற்று போன்ற பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கின்றது. தென்கிழக்கு மூலையில் சில இடங்கள், தவிர முழு நாடுமே நெருக்கடிக்குள் - பேரவலத்துக்குள் - மாட்டியுள்ளது.

வெள்ளத்தினால் மக்கள் பல்லாயிரக்கணக்கில் இடம்பெயர்ந்துள்ளனர். அகதிகளாகியுள்ளனர். மண்சரிவு மற்றும் மோசமான கால நிலையால் பல டசின் கணக்கானோர் உயிரிழந்திருக்கிறார்கள்.

ரயில் போக்குவரத்து முற்றாக முடங்கியுள்ளது. இன்று காலையில் இருந்து சகல ரயில் சேவைகளும் அந்தந்த இடத்திலேயே நிறுத்தப்பட்டுள்ளன. பல இடங்களில் தண்டவாளங்களை மேவி வெள்ளம் பாய்கின்றது.

பல்லாயிரக் கணக்கானோர் தமது பயணங்களின் இடைவழியில் சிக்குப்பட்டுள்ளனர். ரயில் நிலையங்களிலும் பஸ் தரிப்பு நிலையங்களிலும் அவலப்படும் இக்கட்டு அவர்களுக்கு.

போக்குவரத்துக்கள் முடங்கியமையால் பலரும் நடுவழியில் அந்தரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசின் பேரிடர் முகாமைத்துவப் பிரிவுகள் சுறுசுறுப்பாக இயங்கினாலும் கூட - அரசு இயன்றவரை உதவிகளை விரைந்து அளித்தாலும் கூட - இப்போது இருக்கின்ற நெருக்கடியில் இருந்து மக்களை பாதுகாத்து, உடனடி உதவிகளை வழங்குவதற்கு அவை மட்டும் போதா. பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவிகளை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சக பிரஜைகளுக்கு தாமாக வழங்க முன்வர வேண்டும். தங்குமிட வசதி, உடனடி உணவு, உடை, குடிதண்ணீர் போன்றவற்றை பாதிப்புற்றோருக்கு தேடி வழங்க பின் நிற்கக் கூடாது.

'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்பது போல இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் கையிருப்பில் வைத்திருக்கும் பொருள்களை வர்த்தகர்கள் அடாத்து விற்பனைக்கு முயலக் கூடாது. இயன்றவரை மக்களுக்குப் பங்கிட்டு, நியாய விலையில் வழங்கி, இந்த நெருக்கடியில் இருந்து சமூகம் மீளுவதற்கு உதவ வேண்டும்.

விவசாயம், கால்நடைப் பண்ணை உட்பட பலரின் வாழ்வாதாரங்கள் இந்த அனர்த்தத்தில் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கும் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

புயலும் மழையும் வெள்ளமும் சில தினங்களில் நீங்கிவிடலாம். ஆனால் அவை ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் - ஆழமான வடுக்கள் - இலகுவில் நீங்கா.

அவற்றிலிருந்து மக்களை மீட்டெடுப்பதில் அரசாங்கமும், அதன் பேரிடர் முகாமைத்துவ பிரிவுகளும், மாவட்ட செயலகங்களும் சுற்றிச் சுழன்று 24 மணி நேரமும் பணியாற்றினாலும் கூட, அவற்றுக்கு அப்பால் தொண்டு நிறுவனங்களும் இந்த விடயத்தில் நேரடியாக இறங்கி மக்களுக்கு உதவ முன் வர வேண்டும்.

பேரிடர் நெருக்கடியிலிருந்து நமது சகோதரர்களை - உறவுகளை - நம் நாட்டு சக பிரஜைகளை - மீட்டெடுப்பதற்கு அனைவரும் ஒன்றித்து உழைக்க வேண்டும். இது லாபம் கருதாமல், சமயம் கருதி, சந்தர்ப்பம் பார்த்து, பணியாற்ற வேண்டிய பொறுப்பான காலமாகும்.

# பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தயார் நிலையில் யாழ். மாநகரசபை

## முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா தெரிவிப்பு

பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழுமையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று யார்ப்பாணம் மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்படும் மழை வெள்ளப் பாதிப்புக்களில் இருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கு தேவையான முழுமையான முன் ஏற்பாடுகளுடன் மாநகரசபை நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது என்று முதல்வர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,



மழை வெள்ளப்பாதிப்புக்களை குடியிருப்புப் பகுதிகளில் குறைக்கும் முகமாக மழை வெள்ள நீரை வழிந்தோடச் செய்வதற்கான தற்காலிக நடவடிக்கைகள் மற்றும் அதீத பாதிப்புக்கள் காரணமாக பிரதேச செயலகங்களால் ஏற்படுத்தப்படும் இடைத்தங்கல் முகாம்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட முக்கிய சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாக மாநகர சபையின் பொதுச் சுகாதார பொறியியற் பிரிவு, சுகாதாரப் பிரிவு, மின்சாரப் பகுதி மற்றும் தீயணைப்பு பிரிவு உள்ளிட்ட முக்கிய மாநகர பிரிவுகளும் அதன் உத்தியோகத்தர்களும் தயார் நிலையில் உள்ளனர்.

தொடர்ந்தும் மாநகர எல்லைப் பிரதேசங்களில் மழை வெள்ளநீர் வழிந்தோடுவதற்கான தற்காலிக நடவடிக்கைகளை மாநகர ஊழியர்கள், உத்தியோகத்தர்களது உதவியுடன் மராமத்துக்குழுத் தலைவர், சுகாதாரக்குழு தலைவர் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் குழு களத்தில் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது.

வெள்ளப் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நடவடிக்கைகள் மற்றும் மாநகர சபையின் அடிப்படை தேவைகளுக்கான முறைப்பாடுகளை வழங்குவதற்காக பொது மக்கள் மாநகர சபையின் 021 222 2275 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு எந்நேரமும் அழைக்க முடியும். – என்று தெரிவித்துள்ளார்.



# நிறைந்து வழிகிறது காசல்ரீ நீர்த்தேக்கம்!

(க.கிஷாந்தன்)

களனி ஆற்றின் பிரதான கிளையானான கெசல்கமுவ ஓயாவில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது நீர்த்தேக்கமான காசல்ரீ நீர்த்தேக்கம் அதன் முழு கொள்ளளவையும் எட்டியுள்ள நிலையில் அதன் தானியங்கி வான் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேறி வருகின்றது.

நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள 14 தானியங்கி வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீரானது களனி ஆற்றின் நீர் மட்டத்தை வெகுவாக அதிகரிக்கும் என்பதால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கீழ் பகுதியில் களனி ஆற்றின் கரையில் குடியிருப்பவர்களும் இந்த ஆற்றைப் பயன்படுத்துபவர்களும் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று நீர்த்தேக்கத்தின் கடமை நேர பொறியியலாளர் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் காசல்ரீ நீர் தேக்கத்துக்கு அதிகளவான நீர் விநியோகிக்கப்படுவதால் இந்த தானியங்கி வான் கதவுகள் அவ்வப்போது திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தம்பலகாமம் மக்கள் இடப்பெயர்வு!





(ஹஸ்பர் ஏ.எச்.)

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையின் காரணமாகும் திட்வா புயல் காரணமாகவும் முள்ளிப்பொத்தானை தம்பலகாமம் பிரதேச வயல் நிலப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்று (28) தம்பலகாமம் ஊத்த வாய்க்கால் உடைப்பெடுத்துள்ளதால் தம்பலகாமம் கிண்ணியா பிரதான வீதி யால் வெள்ள நீர் ஊடறுத்துப் பாய் கிறது.

குறித்த ஊத்தை வாய்க்கால் உடைப் பெடுத்ததால் அதனை சூழவுள்ள வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள் ளன.

முள்ளிப்பொத்தானை, ஜாமியா நகர், ஈச்சநகர், பத்தினிபுரம், புதுக்குடி யிருப்பு,கோயிலடி உள்ளிட்ட தாழ் நிலப் பகுதிகளும் நீரில் மூழ்கியுள்ளது.

தம்பலகாமம்,கோயிலடி பகுதி யில் பாதிக்கப்பட்ட 31 குடும்பங்களைச் சேர்ந்த 90 பேர் திருகோணமலை ஆதிகோனேஸ்வரா மகாவித்தியால யத்தில் உள்ள இடைத் தங்கல் முகாமில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ள னர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகள் தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 11 பிரதேச செயலர் பிரிவு களை உள்ளடக்கிய வகையில் 124 கிராம சேவகர் பிரிவில் இருந்து 5433 குடும்பங்களை சேர்ந்த 16063 பேர் இன்று பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை யம் தெரிவித்துள்ளது.



# மஸ்கெலியா நல்லதண்ணி வீதியில் மண் திட்டுகள் சரிந்து வீழ்ந்தன!

மஸ்கெலியா நல்லதண்ணி பிர தான வீதியில் பல இடங்களில் பாரிய மண் திட்டுகள் சரிந்து விழுந்த தில் போக்குவரத்து நடவடிக்கை கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் மஸ்கெலியா நல்ல தண்ணி பிரதான வீதியில் புரவுன்லோ கங்கேவத்தை மற்றும் ரக்காடு கிரா மத்தில் உள்ள அதிரடி படையினர் முகாம் பகுதியில் பாரிய மண் திட்டுகள் சரிந்து விழுந்ததில் மஸ்கெலியா நல்ல தண்ணி, மஸ்கெலியா மரே, மஸ் கெலியா வாழமலை பகுதிகளுக்கு போக்குவரத்து நடவடிக்கைகள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து கன மழை கடும் காற்று வீசுவதால் பாரிய மரங்கள் வீழ்ந் துள்ளன. நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்த நிலையில் உள்ளது. குறிப்பாக மவுஸ்சாகலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதிக ரித்துக் காணப்படுகிறது.

தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவ தானமாக இருக்க வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட செயலர் துஷாரி தென்னகோன் மற்றும் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# மன்னாரில் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின!

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

தொடர்ச்சியாக பெய்து வரும் காற்றுடன் கூடிய மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியாக காற்றுடன் மழை பெய்து வருவதால் மக்கள் இடம்பெயர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்தார்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் காற்றுடன் கூடிய கனமழை காரணமாக ஆற்று நீர் மட்டம் உயர்ந்த நிலையில் காணப்படுகிறது.

இதனடிப்படையில் மல்வத்து ஓயாவின் நீர்மட்டம் தற்போது 16.9 அடியாகவும் காணப்படுகின்றது. தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக வெள்ள நீர் மட்டம் அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மடு , நானாட்டான், முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளில் தாழ் நில கிராம அலுவலகர் பிரிவுகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பாதிப்புகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு மையங்களுக்குச் செல்லுமாறும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவி பணிப்பாளர் தெரிவித்தார்.

காற்றின் வேகம் தொடர்ச்சியாக உயர்வாக காணப்படுவதால் கடற்கரை ஓரங்களில் உள்ள கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு, தேவன் பிட்டி, அந்தோனியார் புரம் ஆகிய கிராமங்கள் கடல் நீரால் பாதிக்கப்பட்டுள்ளன. கிராம அலுவலர்கள் ஊடாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் மாவட்டத்தில் உள்ள குளங்களின் நீர் மட்ட உயர்வு அதிகரித்து காணப்படுகிறது.

கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் நடவடிக்கைகளில் முப்படையினர் ஈடுபட்டுள்ளனர். அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாவட்ட செயலகத்துடன் இணைந்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை, மன்னார் பிரதான பாலத்தில் வெள்ள நீர் காணப்படுவதால் மன்னார் நகரில் இருந்து அவசிய தேவை இன்றி பயணிப்பவர்களை இராணுவத்தினர் மன்னார் பிரதான பால நுழைவு பகுதியில் வைத்து திருப்பி அனுப்புகின்றனர்.

மன்னார் பகுதியில் கடற்கரையோரங்களில் நங்கூரமிடப்பட்ட மீன்பிடி படகுகள், கடும் காற்று மற்றும் மழை காரணமாக வேறு பகுதியில் கரை ஒதுக்கி உள்ளன என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். மீனவர்கள் பாரிய பாதிப்பையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல்வேறு கிராமங்களில் வெள்ள நீர் காணப்படுவதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.



# திருகோணமலை மாவட்டத்தில் 11 ஆயிரத்து 350 பேர் பாதிப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

சீர்ற்ற காலநிலை மற்றும் டித்வா புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 3844 குடும்பங்களை சேர்ந்த 11 ஆயிரத்து 350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி இன்று காலை வெளியான தகவலின் அடிப்படையில் இந்த விவரம் வெளியாகியுள்ளது.

இதில் 95 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 3515 குடும்பங்களை சேர்ந்த 9683 நபர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 04 பாதுகாப்பான தற்காலிக முகாம்களில் 204 குடும்பங்களை சேர்ந்த 589 பேர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 85 குடும்பங்களை சேர்ந்த 299 நபர்களும், தம்பலகாமம் 188 குடும்பங்களை சேர்ந்த 563 நபர்களும், மொறவெவ 34 குடும்பங்களை சேர்ந்த 99 நபர்களும், சேருவில 105 குடும்பங்களை சேர்ந்த 401 நபர்களும், வெருகல் 16 குடும்பங்களை சேர்ந்த 48 நபர்களும், மூதூர் 750 குடும்பங்களை சேர்ந்த 2485 நபர்களும், கிண்ணியா 1600 குடும்பங்களை சேர்ந்த 3800 நபர்களும், கோமரங்கடவல 05 குடும்பங்களை சேர்ந்த 22 நபர்களும் , பதவிஸ்ரீபுர 40 குடும்பங்களை சேர்ந்த 123நபர்களும், குச்சவெளி 870 குடும்பங்களை சேர்ந்த 2880 நபர்களும், கந்தளாய் 151 குடும்பங்களை சேர்ந்த 630 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் திருகோணமலை ஆதி கோனேஸ்வரா இடைத்தங்கல் முகாமில் 22 குடும்பங்களை சேர்ந்த 64 நபர்களும், இரு முகாம்களில் கிண்ணியா பாரதிபுரம் வைஷ்னவி மகாவித்தியாலயத்தில் 150 குடும்பங்களை சேர்ந்த 420 நபர்களும், கிண்ணியா அல் றவ்லா மகாவித்தியாலயத்தில் 30 குடும்பங்களை சேர்ந்த 95 நபர்களும் மொத்தமாக 180 குடும்பங்களை சேர்ந்த 515 நபர்களும், குச்சவெளி கமாஸ் நகர் பாலர் பாடசாலையில் 2 குடும்பங்களை சேர்ந்த 10 நபர்களும் பாதுகாப்பாக குறித்த இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.





# கற்பிட்டியிலும் தொடர் மழை மின்சாரமும் தடைப்பட்டுள்ளது!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

தொடர்ந்துபெய்துவரும்கனமழையால் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக கற்பிட்டி பகுதியும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் காற்றின் காரணமாக கற்பிட்டி நகர மத்தியில் காணப்பட்ட பாரிய பல வருடங்கள் பழமை வாய்ந்த ஆல மரம் சரிந்து பாதைக்கு குறுக்காக மின்சார கம்பத்தை உடைத்துக் கொண்டு வீழ்ந்துள்ளது.

பல பகுதிகளுக்கு செல்லும் மின் கம்பிகளையும் பாதிப்புக்குள்ளாக்கி வீழ்ந்துள்ளன. இதன் காரணமாக கற்பிட்டி நகர் முழுவதும் இன்று மின் தடைப் பட்டுள்ளது



# மஹுவ மற்றும் எலுவன்குளம் பகுதிகளில் மக்களை மீட்க உதவிய கடற்படையினர்!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

தீவில் பெய்து வரும் கனமழையினால் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக, குருநாகலில் உள்ள மஹுவ கல்டன் குளத்தின் நீர்மட்டம் பெருக்கெடுத்தல் மற்றும் புத்தளம் எலுவன் குளம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக, பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் பணிகளை கடற்படை அனர்த்த நிவாரணக் குழுக்கள் வெள்ளிக் கிழமை (28,) காலை மேற்கொண்டன.

அதன்படி, கடற்படை பேரிடர் நிவாரணக் குழுக்கள், உள்ளூர்வாசிகளின் ஆதரவுடன், மஹுவ மற்றும் எலுவன் குளம் பகுதிகளில் தொடர்ந்து அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு உதவிய கடற்படை

(எம் எச் எம் சியாஜ்)

புங்குடுதீவில் சிக்கிக்கொண்ட ஒரு பெண் ஒருவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்ட நிலையில், இன்று வெள்ளிக்கிழமை காலை கடற்படையினரால் புங்குடுதீவு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டார்.

அதன்படி, சம்பவம் தொடர்பாக வேலணைப் பிரதேச செயலகத்திலிருந்து கிடைத்த தகவலின்படி, கடற்படையினர் உடனடியாக பதிலளித்து, நோய்வாய்ப்பட்ட பெண்ணை அழைத்து வர மருத்துவக் குழுவுடன் கூடிய ஆம்புலன்ஸ் ஒன்றை அனுப்பினர்.

அங்கு, வெள்ளம் காரணமாக சிகிச்சைக்கு செல்ல முடியாமல், மாரடைப்பு காரணமாக மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த குறித்த பெண்ணுக்கு அடிப்படை முதலுதவி அளிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக புங்குடுதீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் மலர் வெளியீடும் உதவியும்!










சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், இன்று வெள்ளிக்கிழமை காலை ஞானச்சுடர் கார்த்திகை மாத 335 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வெளியீட்டுரையை ஊடகவியலாளர் சி.தில்லைநாதன் நிகழ்த்தினார்.

மதிப்பீட்டுரையை அதிபர் செ.பரமேஸ்வரன் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

இதனையடுத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான 02 சைக்கிள்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

தொல்புரம், சுழிபுரத்தைச் சேர்ந்த தரம் 10 இல் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியை சேர்ந்த தரம் 06 இல் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

# ‘ஜென்ஸீ’ தலைமுறையினரை பாராட்டினார் பிரதமர் மோடி



நம் ஜென்ஸீ பொறியாளர்கள், வடிவமைப்பாளர்கள், கோடிங் பணிகளை மேற்கொள்பவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கி வருகிறார்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில், இந்திய விண்வெளி ஸ்டார்ட் அப் நிறுவனமான ஸ்கைரூட்டின் இன்ஃபினிடி வளாகத்தை வீடியோ கான்ஃபரன்சிங் முறையில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

மேலும், ஸ்கைரூட்டின் முதல் சுற்றுப்பாதை ரொக்கெட்டான விக்ரம்-1 ஐ அவர் அறிமுகப்படுத்தினார். பின்னர் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி,

“இந்திய இளைஞர்கள் நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். அவர்கள் எந்த ஒரு வாய்ப்பையும் புத்திசாலித்தனமாக பயன்படுத்துகிறார்கள்.

அரசாங்கம் விண்வெளித் துறையை தனியாருக்கு திறந்தபோது நாட்டின் இளைஞர்கள், குறிப்பாக ‘ஜென்ஸீ’ இளைஞர்கள் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வந்தனர். தற்போது 300 இற்கும் மேற்பட்ட ‘ஸ்டார்ட் அப்’ நிறுவனங்கள் இந்தியாவின் விண்வெளி எதிர்காலத்துக்கு புதிய நம்பிக்கையைத் தருகின்றன.

இன்று ‘ஜென்ஸீ’ பொறியளார்கள், வடிவமைப்பாளர்கள், கோடிங் பணிகளை மேற்கொள்பவர்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கி வருகிறார்கள். ரொக்கெட் நிலைகள், செயற்கைக் கோள் தளங்கள் என ஒவ்வொன்றிலும் அவர்கள் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு கற்பனை செய்ய முடியாத துறைகளில் இன்று இந்திய இளைஞர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இந்தியாவின் தனியார் விண்வெளி திறமை உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான இடமாக மாறி வருகிறது.

இன்று விண்வெளித் துறையில் நாடு முன் எப்போதும் இல்லாத வாய்ப்புகளைக் காண்கிறது. ஸ்கைரூட்டின் இன்ஃபினிடி வளாகம், புதிய சிந்தனை, புதுமை மற்றும் இளைஞர் சக்தியின் பிரதிபலிப்பாகும்.

நமது இளைஞர்களின் புதுமை, திறன், தொழில்முனைவு ஆகியவை புதிய உயரங்களைத் தொடுகின்றன. இன்றைய நிகழ்வு எதிர்காலத்தில், உலக அளவில் செயற்கைக்கோள்களை ஏவுவதில் இந்தியா தலைவராக உருவெடுக்கும் என்பதைக் காட்டுகிறது.

இந்தியாவின் விண்வெளிப் பயணம் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் தொடங்கியது. ஆனால், நமது லட்சியங்கள் ஒருபோதும் மட்டுப்படுத்தப்படவில்லை. ரொக்கெட்டின் ஒரு பகுதியை சைக்களில் எடுத்துச் சென்றதில் இருந்து உலகின் மிகவும் நம்பகமான ஏவுகணை வாகனம் வரை மிகப் பெரிய உயரங்களை இந்தியா அடைந்துள்ளது.

நம்பகத்தன்மை, திறன், மதிப்பு ஆகியவற்றுடன் இந்தியா தனது சொந்த அடையாளத்தை உருவாக்கி உள்ளது. இந்திய விண்வெளிப் பயணத்துக்கு இஸ்ரோ பல பத்தாண்டுகளாக ஒரு புதிய பாதையை உருவாக்கிக்கொடுத்துள்ளது.” என தெரிவித்துள்ளார்.

# செங்கோட்டையன் குறித்த கேள்விக்கு நடிகர் ரஜினிகாந்த் பதில்கூற மறுப்பு



விஜய்யின் த.வெ.கவில் செங்கோட்டையன் இணைந்தமை குறித்த கேள்விக்கு ‘நோ கொமென்ட்ஸ்’ என்று கூறிவிட்டு நடிகர் ரஜினிகாந்த் சென்றுள்ளார்.

கோவாவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்வதற்காக, நடிகர் ரஜினிகாந்த் தனது மனைவி லதா மற்றும் மகள் ஐஸ்வர்யாவுடன் நேற்று சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவா புறப்பட்டு சென்றார்.

முன்னதாக, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் ரஜினிகாந்த் கூறுகையில்,


“ஜெயிலர் இரண்டாம் பாகம் படத்தின் படப்பிடிப்பு நன்றாக சென்று கொண்டிருக்கிறது. கோவாவில் சர்வதேச திரைப்பட விழாவில் எனக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கின்றனர். அதற்காக நான் செல்கிறேன்.

உங்கள் அனைவரின் ஆசிர்வாதத்துடன், நான் தொடர்ந்து சூப்பர் ஸ்டாராக உள்ளேன். பிறந்தநாள் கொண்டாடும் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துகள்.” என்றார்.

அப்போது, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியில் இணைந்ததை பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு, ‘நோ கொமென்ட்ஸ்’ என்று கூறிவிட்டு ரஜினிகாந்த் சென்றுள்ளார்.

# அ.தி.மு.கவை பலவீனப்படுத்தி பெரிய சக்தியாக பா.ஜ.க திட்டம்

## துரை வைகோ தெரிவிப்பு



அ.தி.மு.கவை பலவீனப்படுத்தி, தமிழகத்தில் இரண்டாவது பெரிய சக்தியாக வரவேண்டும் என்பது பா.ஜ.கவின் ஆசை என்று ம.தி.மு.க. முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி தெரிவித்தார்.

கோவில்பட்டியில் நேற்று செய்தியாளர்களிடம் துரை வைகோ கூறும் போது,

“த.வெ.கவில் இணைவது என்பது செங்கோட்டையன் எடுத்த முடிவு. அவரின் தனிப்பட்ட விருப்பம். த.வெ.கவில் செங்கோட்டையன் இணைவதால் பலமா, பலவீனமா என்பதை 2026 சட்டப்பேரவை தேர்தலில் அக்கட்சி பெறும் வாக்குகளை பொறுத்தே சொல்ல முடியும். அ.தி.மு.கவை பலவீனப்படுத்தி, தமிழகத்தில் இரண்டாவது பெரிய சக்தியாக வரவேண்டும் என்பது பா.ஜ.கவின் ஆசை.

சட்டப்பேரவை தேர்தல் ஆசனம், கூட்டணி குறித்து நான் முடிவெடுக்க முடியாது. ம.தி.மு.க. தலைவர் வைகோ மற்றும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இருவரும் பேசி முடிவு எடுப்பார்கள். எங்களுடைய சின்னத்தில் நிற்க வேண்டும் என்பது ம.தி.மு.க. தொண்டர்கள் விருப்பம். இது குறித்து கூட்டணி பேச்சுவார்த்தையின் போது சுமூகமாக பேசி முடிவெடுக்கப்படும்.

தமிழகத்தில் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று பா.ஜ.கவை சேர்ந்த வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார். அப்படி என்றால், பிற கட்சிகள் ஆட்சி செய்தால் நீங்கள் கொடுக்க மாட்டீர்களா?” - என்றார்.



# ஹொங்கொங்கில் 8 அடுக்குமாடி கட்டடங்களில் ஏற்பட்ட தீ விபத்தில் இதுவரை 75 பேர் உயிரிழப்பு

ஹொங்கொங் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி இதுவரை 75 பேர் உயிரிழந்துள்ளனர். 70 இற்கும் மேற்பட்டோர் பலத்த தீக்காயமடைந்து உள்ளனர். 279 பேரை காணவில்லை.

ஹொங்கொங்கின் டய் போ பகுதியில் வாங் பக் கோர்ட் என்ற அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் உள்ளது. இதில் 8 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்பும் 31 மாடிகளை கொண்டதாகும்.

ஒட்டுமொத்தமாக 2,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இந்த வீடுகளில் சுமார் 5,000 பேர் வசித்து வந்தனர். கடந்த சில மாதங்களாக வாங் பக் கோர்ட் அடுக்குமாடி குடியிருப்பில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தன. இதற்காக சாரம் அமைக்க மூங்கில் கட்டைகளும் தூசி பறக்காமல் இருக்க தார்பாலின் துணிகளும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

இந்த சூழலில் கடந்த புதன்கிழமை பிற்பகலில் வாங் பக் கோர்ட் வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. மூங்கில் சாரம், தார்பாலின் காரணமாக 8 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் தீ மளமளவென்று பரவியது. பராமரிப்பு பணி காரணமாக பெரும்பாலான வீடுகளின் ஜன்னல்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததன. இதன்காரணமாக தீ விபத்து ஏற்பட்டதை பொது மக்களால் உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

ஒரே நேரத்தில் 8 அடுக்குமாடி குடியிருப்புகளிலும் வானளாவிய உயரத்துக்கு தீப்பற்றி எரிந்தது. சுமார் 20 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு தீ அணைக்கப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். தீ விபத்து நேரிட்ட பகுதியை ஹொங்கொங் தலைமை செயல் அதிகாரி ஜான் லீ நேற்று பார்வையிட்டார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், "வாங் பக் கோர்ட் வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 75 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். முதல்கட்ட கணக்கெடுப்பின்படி 279 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது." என்று தெரிவித்தார்.

முதல்கட்ட விசாரணையில் சிகரெட்டை அணைக்காமல் வீசியதால் தீ விபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. அடுக்குமாடி குடியிருப்பில் பராமரிப்புப் பணியை மேற்கொண்ட நிறுவனத்தின் 3 மூத்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

# இம்ரான் கான் நலமுடன் இருக்கிறார்; வதந்திகளுக்கு சிறை நிர்வாகம் மறுப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் சிறையில் கொல்லப்பட்டார் என வெளியான தகவலுக்கு அடியாலா சிறை நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பி.டி.ஐ) கட்சியின் நிறுவனருமான இம்ரான் கான் சிறையில் கொலை செய்யப்பட்டுவிட்டார் என சமூக வலைதளங்களில் செய்திகள் பரவின. இதையடுத்து அடியாலா சிறை வளாகத்தில் இம்ரான் கானின் பி.டி.ஐ. கட்சி ஆதரவாளர்கள் பெருமளவில் திரண்டனர்.

இம்ரான் கானை பார்க்க வேண்டும் என்று அவர்கள் சிறை வளாகத்துக்குள்



புகுந்து ரகளையில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்றம் அளித்த உத்தரவின்படி சிறையில் இம்ரான் கானை சந்திக்க அவரது சகோதரிகள் நோரின் நியாஸி, அலீமா கான், உஸ்மா கான் ஆகியோரும் வந்தனர். ஆனால், இம்ரானை சந்திக்க அவர்களுக்கு பொலிஸாரும் சிறை நிர்வாகத்தினரும் அனுமதி தரவில்லை.

இந்த நிலையில் இம்ரான் கான் குறித்து சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல்களுக்கு அடியாலா சிறை நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"இம்ரான் கான் முழு ஆரோக்கியத்துடன் இருக்கிறார். அவருக்கு முழுமையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அடியாலா சிறையிலிருந்து அவர் மாற்றப்பட்டதாக வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லை." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை | 28/11/2025

## கனடாவில் 200 கிலோ கொக்கெயின் மீட்பு

கனடாவின் வான்கூவர் துறைமுகத்தில் நுழைந்த ஒரு கப்பலில் 200 கிலோ கிராமுக்கு மேற்பட்ட கொக்கெயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. 03



# மாவீரத்தின் மகத்துவத்துவத்தை உணர்த்தி நிற்கும் தமிழர் தேசம்

## சர்வதேச தமிழர் பேரவையின் தலைவர் தெரிவிப்பு

மாவீரத்தின் மகத்துவத்துவத்தை தமிழர் தேசம் இன்று உணர்த்தி நிற்கிறது என்று அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மாவீரர் நாள் குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“நவம்பர் 27 தமிழ் தேசிய மாவீரர்களை கூட்டாக நினைவு கூரும் நாள். ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்முயிர்களை ஈந்த மானமா மறவர்களை எங்கள் தேசமே பூசிக்கின்ற அதியற்புத நாள்.

இந்த நாள் என்பது ஈழத்திலிருந்து உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் மனங்களில் ஈரத்தையும் வீரத்தையும் பிறப்பிக்கின்ற நாள்.

# வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு கனடா நிரந்தர வதிவிட அழைப்பு

1,000 வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு கனடா நிரந்தர வதிவிட அழைப்பு விடுத்துள்ளது.

கனடா அரசு, 2025 நவம்பர் 27 அன்று நடைபெற்ற சமீபத்திய எக்ஸ்பிரஸ் என்ட்ரி சுற்றில், 1,000 வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு நிரந்தர வதிவிடத்திற்கு (PR) விண்ணப்பிக்க அழைப்புகளை வழங்கியுள்ளது.

இந்த அழைப்புகள் Canadian Experience Class (CEC) பிரிவின் கீழ் வழங்கப்பட்டன.

இந்த சுற்றில், Comprehensive Ranking System (CRS) மதிப்பெண் குறைந்தபட்சம் 531-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த சில மாதங்களில் தொடர்ந்து நடைபெற்ற CEC-only சுற்றுகளில் காணப்பட்ட நிலையான மதிப்பெண் வரம்பில் (531-534) உள்ளது.

கனடாவில் ஏற்கனவே வேலை செய்து வரும் வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் பட்டம் பெற்றவர்கள்



விரைவில் குடியேறி சமூகத்தில் இணைந்து விடுவார்கள் என்பதால், அவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

IRCC (Immigration, Refugees and Citizenship Canada) வெளியிட்ட தகவலின்படி, 531 மதிப்பெண் பெற்ற பலர் இடம் பெற, tie-break rule அடிப்படையில், முன்னதாக Express Entry profile உருவாக்கியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

புதிய விண்ணப்பதாரர்கள், காலாவதியாகும் வேலை அனுமதிகள், மற்றும் மொழித் தேர்வில் மேம்பாடு செய்தவர்கள் போன்ற காரணங்களால் சிறிய அளவிலான மதிப்பெண் மாற்றம் ஏற்பட்டதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனால், 531-535 மதிப்பெண் வரம்பில் உள்ளவர்கள் எதிர்கால சுற்றுகளில் பாதுகாப்பான நிலையில் இருப்பார்கள். குறைந்த மதிப்பெண் பெற்றவர்கள், கனடாவில் கூடுதல் வேலை அனுபவம் சேர்த்தல், மொழித் தேர்வை மீண்டும் எழுதுதல் அல்லது Provincial Nomination பெறுதல் மூலம் தங்கள் வாய்ப்புகளை அதிகரிக்கலாம்.

இந்த நிலையான அழைப்புகள், கனடா அரசு தனது குடியேற்றத் திட்டத்தில் பெரிய மாற்றங்களை செய்யாமல், தற்போதைய தொழிலாளர்களை நிலைப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுவதை காட்டுகிறது.

# கனடாவில் வசிக்கும் இந்தியர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க கோரிக்கை



வெளிநாட்டு இந்தியர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள 79 இந்திய அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தி, IndUS Canada Forum அமைப்பானது, இந்திய அரசிடம் வெளிநாட்டு இந்தியர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

அமைப்பின் தலைவர் விக்ரம் பாஜ்வா, இரட்டை குடியுரிமை என்பது வெறும் நிர்வாக மாற்றம் அல்ல, இந்தியாவின் உலகளாவிய செல்வாக்கை உயர்த்தும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீர்திருத்தம் எனக் கூறியுள்ளார்.

வெளிநாடுகளில் 80 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசித்து வருவதாக வெளிநாட்டு அமைச்சகத்தின் தரவுகளை அவர் மேற்கோள் காட்டினார்.

இவர்களின் நிதி வலிமை, தொழில்முறை திறன்கள், உலகளாவிய செல்வாக்கு ஆகியவற்றை இந்தியா முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இஸ்ரேல், கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் ஏற்கனவே இரட்டை குடியுரிமையை வழங்கி, தங்கள் பொருளாதார மற்றும் தூதரக வலிமையை விரிவாக்கியுள்ளன.

“இந்த நாடுகள் தங்கள் புலம்பெயர் மக்களை தேசிய வளர்ச்சிக்காக பயன்படுத்துகின்றன; இந்தியா ஏன் OCI (Overseas Citizen of India) விசா மட்டுமே வழங்கி தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்?” என பாஜ்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவில் சமீபத்திய வரி உயர்வுகள் மற்றும் புவிசார் பதற்றங்கள் காரணமாக இந்திய வம்சாவளி தொழில்முனைவோர் சிக்கலில் உள்ளனர்.

இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டால், அவர்கள் இந்தியாவில் நீண்டகால முதலீடுகளைச் செய்யும் நம்பிக்கையும் பாதுகாப்பும் கிடைக்கும்.

கனடாவில், குறிப்பாக பஞ்சாப் வம்சாவளி இந்தியர்களை பாதிக்கும் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு இது தீர்வாக இருக்கும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இரட்டை குடியுரிமை இந்தியாவின் பொருளாதாரம், கலாச்சாரம், தூதரகம் ஆகியவற்றை உலகளவில் வலுப்படுத்தும் என்றும், சுற்றுலா, தானதர்மம், சமூக முன்னேற்றம் ஆகியவை அதிகரிக்கும் என்றும் IndUS Canada Forum தெரிவித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட கொள்கை அமைப்பாளர்கள் இந்த நீண்டகால கோரிக்கையை கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

---

## மாவீரத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே மாவீரர்களின் நினைவுகளுடன் ஈழத் தமிழ் மக்களாகிய நாம் எமது கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வலிமைமிகுந்த நாளாகவும் அமைகின்றது.

இம்முறை மாவீரர் நாளில் தமிழர் தேசம் என்றுமில்லாத வகையில் பேரெழுச்சியுடன் காணப்படுகின்றமை மாவீரர் பெற்றோர்களையும் உருத்துடையோரையும் பெருமிதம் கொள்ள வைக்கும்.

தமிழர் தேசம் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன் எங்கும் மாவீரர்களை நினைவு கூறுகின்ற பாடல்களின் ஒலி நம் வாழ்வுமீதும் மீண்டெழுதல்மீதும் கொண்டுள்ள மிகப்பெரிய நம்பிக்கையை உணர்த்துகின்றது.

நினைவுகூர்தல் என்பது உலகம் எங்கும் உள்ள மக்களின் அடிப்படை உரிமை. அது மக்களின் உணர்வு வெளிப்பாட்டின் ஆற்றுப்படுத்தல்.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நினைவேந்தல் என்பது பண்பாட்டு உரிமை. அதனை உலகம் முழுவதுமுள்ள எமது மக்கள் அனைத்துச் சமூகங்களுக்கும் உணர்த்தும் வகையில் நினைவேந்தலில் ஈடுபட்டுள்ளனர்.

உன்னத இலட்சியத்திற்காக தமது இளமையை, தமது வாழ்வை, தமது இன்பங்களைத் துறந்து களமாடி மாண்டவர்கள் மாவீரர்கள். தேச விடுதலை ஒன்றே தங்கள் பெரு இலட்சியம் என்று மண்ணில் விதை யான மாவீரர்களை பல இடர்பாடுகளின் மத்தியிலும் மக்கள் நினைவேந்தல் செய்வதுதான் மாவீரத்தின் மகத்துவ மாகும்.

எங்கள் தேசத்தை, மக்களின் வாழ்வை வலுவூட்டும் பணிகளை இன்னமும் பேரேடுப்பில் செய்ய வேண்டும் என்ற உந்துதலை விதைக்கும் இப்புனித நாளில் ஆகுதியான எங்கள் உயிரிலும் மேலான மாவீரர்களுக்கு அகவணக்கத்தை செலுத்துகின்றேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி அனுமதிகளை குறைக்க கனடா முடிவு

கனடா அரசு, அடுத்த ஆண்டில் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி அனுமதிகள் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

கனடா அரசு, சர்வதேச மாணவர்கள் அல்லது சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்பட இருக்கும் கல்வி அனுமதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பு ஒன்றில், 2026ஆம் ஆண்டில், 408,000 வெளிநாட்டு மாணவர்களுக்கு மட்டுமே கல்வி அனுமதிகள் மட்டுமே வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடயம் என்னவென்றால், இந்த 408,000 அனுமதிகளில், 155,000 மட்டுமே புதிதாக கனடாவுக்கு வரும் சர்வதேச மாணவர்களுக்கு வழங்கப்படும்.

மீதமுள்ள 253,000 அனுமதிகள், ஏற்கனவே கனடாவிலிருக்கும் மாணவர்களுடைய கல்வி அனுமதிகளை நீட்டிப்பது மற்றும் மீண்டும் கனடாவுக்குத் திரும்பும் மாணவர்களுக்கானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2025இல் 437,000 சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதி வழங்க இலக்கு நியமிக்கப்பட்டது. 2024இல் 485,000 சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதி வழங்க இலக்கு நியமிக்கப்பட்டது. ஆக, 2026இல், 2025 ஐ விட 7 சதவிகிதம் குறைவாகவே சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதிகள் வழங்கப்பட உள்ளன.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்பட்ட போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த சட்டவிரோத சரக்குகள் பனாமாவில் இருந்து வந்த கப்பலில் கண்டறியப்பட்டதாக கனடிய எல்லைப் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மொத்தம் 204.5 கிலோகிராம் எடையுள்ள 78 கொக்கெயின் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மோப்ப நாய்களின் உதவியுடன், இந்த கட்டிகள் சிவப்பு திரவம் நிரப்பப்பட்டிருந்த பேன்ட் நிறப்பொருள் என நம்பப்படும் கண்டெய்னர்களுக்குள் மறைக்கப்பட்டிருந்தன.

இந்த பறிமுதல், அமைப்புசார்ந்த குற்றங்களை தடுப்பதில் எங்கள் எல்லை அதிகாரிகள் வகிக்கும் முக்கிய பங்கைக் காட்டுகிறது என கனடிய எல்லைப் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் பசிபிக் பிராந்திய இயக்குநர் நீனா படேல் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருடனான உடனான எங்கள் வலுவான ஒத்துழைப்பின் காரணமாக, சட்டவிரோத போதைப் பொருட்கள் எங்கள் சமூகங்களுக்கு செல்லாமல் தடுக்க முடிகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பறிமுதல் செய்யப்பட்ட கொக்கெயின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கடத்தல் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதேவேளை, பொது பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரீ தனது அறிக்கையில், “இது, குற்றவாளிகள் எவ்வளவு முயற்சிப்பார்கள் என்பதற்கான ஒரு தெளிவான உதாரணம்” என்று குறிப்பிட்டார்.